TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

# FIRST INFORMATION REPORT
## முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C 8044304
02./AC/2022

1. District மாவட்டம் : கரூர் PS காவல்நிலையம்: ஊ.த.க.பிரிவு Year ஆண்டு: 2022 FIR No. மு.த.அ. எண்: Date நாள்: 18.07.2022

2. (i) Act சட்டம்: THE PREVENTION OF Sections பிரிவுகள்:
(ii) Act சட்டம்: CORRUPTION ACT 1988, AS Sections பிரிவுகள்: 7 (a)
(iii) Act சட்டம்: AMENDED IN 2018 Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from நாள் முதல் : 14.7.2022 Date to நாள் வரை : மதியம் சுமார் 3.00 மணி.
Time Period : நேர அளவு Time from நேரம் முதல் : 15.7.2022 Time to நேரம் வரை : மாலை சுமார் 4.00 மணி.
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 18.7.2022 Time நேரம் : காலை 10.00 மணி.
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 18.7.2022 Time நேரம் : காலை 10.00 மணி

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக எழுத்து மூலமாக

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு துாரமும், எத்திசையும் சுமார் 32 km தெற்கு
Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி தாலுக்கா அலுவலகம், அரவக்குறிச்சி. கரூர் மாவட்டம்.
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் S. பழனிச்சாமி (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் (லேட்) சாமியப்பன்
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 1947 (d) Nationality : நாட்டினம் இந்தியன் (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : தொழில் விவசாய கூலி வேலை (g) Address : முகவரி No. 5-579, இந்திரா நகர், சின்னதாராபுரம் அஞ்சல், அரவக்குறிச்சி. தாலுக்கா. கரூர். மாவட்டம்.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary) தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
திரு. ராஜசேகரன், வட்டாட்சியர். அரவக்குறிச்சி. தாலுக்கா அலுவலகம். கரூர். மாவட்டம்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant: குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
தாமதம் இல்லை

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

இத்துடன் தனித்தாளில் கணினியால் தட்டச்சு செய்து இணைக்கப்பட்டுள்ளது.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS..............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................ பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு .............................................. காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

S. பழனிச்சாமி 18.7.2022

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

18.07.2022 AT.14.30 hrs.

Name: பெயர் P. தங்கமணி
Rank: நிலை ......................No. எண் .........
காவல் ஆய்வாளர்
உ.த.க. மாவ
கரூர்

* GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)p.2

Attachment to Column 12 of FIR in Karur V&AC Cr.No.02/AC/2022 u/s 7 (a) of the PC Act, 1988 as amended in 2018.

பணிந்து சமர்பிக்கப்படுகிறது:

கரூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, காவல் ஆய்வாளர் தங்கமணி ஆகிய நான் 18.07.2022 ஆம் தேதி காலை சுமார் 10.00 மணிக்கு நிலைய அலுவலில் இருந்த போது S.பழனிசாமி, த/பெ.சாமியப்பன், நம்பர்.5-579, இந்திரா நகர், சின்னதாராபுரம் அஞ்சல், அரவக்குறிச்சி தாலுகா, கரூர் மாவட்டம் என்பவர் நிலையம் ஆஜராகி எழுத்து மூலமான ஒரு புகாரினை கொடுத்தார். அந்த புகாரின் விபரம் பின்வருமாறு:-

அனுப்புநர் S.பழனிசாமி, த/பெ.சாமியப்பன், நம்பர்.5-579, இந்திரா நகர், சின்னதாராபுரம் அஞ்சல், அரவக்குறிச்சி தாலுகா, கரூர் மாவட்டம். பெறுநர் காவல் ஆய்வாளர் அவர்கள், லஞ்ச ஒழிப்பு பிரிவு, கரூர். ஐயா, நான் கரூர் மாவட்டம், அரவக்குறிச்சி வட்டம், சின்னதாராபுரம் இந்திரா நகரில் எனது குடும்பத்துடன் வசித்து வருகிறேன். நான் விவசாய கூலி வேலை செய்து வருகிறேன். எனக்கு கமலவள்ளி என்ற மனைவியும், ராஜகோபால் மற்றும் நிர்மலா என்ற ஒரு மகனும் மகளும் உள்ளனர். எனக்கு முத்துசாமி என்ற ஒரு அண்ணன் மட்டும் உள்ளார். எனது தந்தை சாமியப்பன் கடந்த 1992-ம் வருடமும் எனது தாயார் திருமதி.தெய்வானை கடந்த 2006-ம் வருடமும் இறந்துவிட்டார்கள். அவர்கள் இருவருக்கும் நான் அப்போதே இறப்பு சான்று வாங்கிவிட்டேன். ஆனால் எனது தாயாருக்கு மட்டும் வாரிசு சான்று வாங்கிவிட்டு, எனது தந்தையின் இறப்பு சான்றை தவறவிட்டுவிட்டதால் அவருக்கு வாரிசு சான்று வாங்காமல் விட்டு விட்டேன். தற்போது, எனது தந்தையின் வாரிசு சான்று பட்டா மாறுதல் செய்ய தேவைப்பட்டதால் அவரது இறப்பு சான்று நகலை கடந்த 06.06.2022 அன்று சின்னதாராபுரம் சார்பதிவாளர் அலுவலகத்தில் வாங்கி கொண்டு 07.06.2022 அன்று ஆன்லைன் மூலம் வாரிசு சான்றுக்கு விண்ணப்பித்து ரூ.60 கட்டணம் செலுத்தினேன். அதன்பிறகு எங்கள் ஊர் விஏஓ திரு.பிரகாஷ் என்பவர் எனது வீட்டிற்கு வந்தும் சின்னதாராபுரம் ஆர்ஐ அவர்கள் என்னை அவரது அலுவலகத்திற்கு வர சொல்லியும் என்னை விசாரித்தார்கள். அதன்பிறகு மண்டல துணை வட்டாட்சியர் அவர்களும் அரவக்குறிச்சி தாலுகா

அலுவலகத்தில் என்னை விசாரித்தார்கள். ஆனால் இதுநாள் வரை எனக்கு வாரிசு சான்று வழங்கப்படவில்லை. அதனால் நான் 14.07.2022 அன்று வியாழன கிழமை மதியம் சுமார் 03.00 மணிக்கு அரவக்குறிச்சி தாலுகா அலுவலகம் சென்று தாசில்தார் திரு.ராஜசேகரன் அவர்களை சந்தித்து எனது வாரிசு சான்று பற்றி விபரம் கேட்டேன். அதற்கு அவர் ஆமாமா உங்க மனு எங்கிட்ட தான் பெண்டிங்ல இருக்கு எனக்கு தனியாக முப்பதாயிரம் ரூபாய் பணம் கொடுத்தீங்கனா வாரிசு சான்று வழங்க ஏற்பாடு செஞ்சிடுறேனு என்னிடம் சொன்னார். அதற்கு நான் என்னால் அவ்வளவு பணம் தரமுடியாது எனக்கு வயதாகிவிட்டதால் கூலி வேலைக்கும் செல்லமுடியவில்லை என்று சொன்னேன். அதற்கு அவர் பணம் கொடுக்காமல் ஆகாது என்று சொல்லி அனுப்பிவிட்டார். அதன் பிறகு மறுநாள் 15.07.2022 அன்று மாலை சுமார் 04.00 மணியளவில் மீண்டும் அரவக்குறிச்சி தாலுகா அலுவலகத்திற்கு சென்று தாசில்தார் திரு.ராஜசேகர் அவர்களை சந்தித்து எனது நிலையை எடுத்து சொல்லி அவ்வளவு பணம் என்னால் கொடுக்கமுடியாது என்றேன். அதற்கு அவர் முதலில் இருபத்தைந்தாயிரம் ரூபாய் முடியுமா என்றார். அதற்கும் நான் முடியாது என்று சொன்னதால் பதினைந்தாயிரம் ரூபாய்க்கு கம்மியாக ஒன்றும் செய்யமுடியாது என்றார். அதற்கு நான் அவரிடம் என்னால் பத்தாயிரம் ரூபாய் மட்டும்தான் புரட்டமுடியும் அதற்கு மேல் முடியவே முடியாது என்றும் சொன்னேன். அப்போது அவர் சரி என்று ஒத்துக்கொண்டு 10 ஆயிரம் பணத்தை 18.07.2022 அன்று மாலை அவரது அலுவலகத்திற்கு வந்து கொடுக்கும்படி சொல்லி அனுப்பிவிட்டார். அரவக்குறிச்சி தாசில்தார் அவர்களுக்கு லஞ்சமாக பணம் கொடுத்து எனது தந்தையின் வாரிசு சான்று பெற எனக்கு விருப்பம் இல்லை. அதனால் அவர் மீது நடவடிக்கை எடுக்க கேட்டுக்கொள்கிறேன். இப்படிக்கு sd/- xxxxxxx (S.Palanisamy) 18/07/2022.

Sir, Received the written complaint on 18.07.2022 at about 10.00 hrs. A Confidential verification was conducted about the complaint through sources. The complaint was found to be true and reputation of the accused was found to be bad. Hence, after getting oral permission from the DVAC, I am registering a case in Karur Vigilance and Anti-Corruption Cr.No.02/AC/2022

u/s 7(a) of the PC Act, 1988 as amended in 2018 at 11.00 hrs on 18.07.2022. Sd/- (XXXXXX) 18.07.2022 P.Thangamani, Inspector of Police, V&AC, Karur.

Original FIR along with the original written complaint of Tr.S.Palanisamy, S/o.Samiyappan, No.5-579, Indra Nagar, Chinnatharapuram Post, Aravakurichi Taluk, Karur is submitted to the Hon'ble Chief Judicial Magistrate and Special Judge, Karur and a copy of FIR will be submitted to the Director, Vigilance and Anti-Corruption, Chennai.

18/07/2022

(P.Thangamani)
Inspector of Police,
Vigilance and Anti-Corruption,
Karur.